Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 105 உள்ளூர் - 15.04.2026 புதன் விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 105 வெளியூர் - 16.04.2026 வியாழன் Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**இந்த தேதியில் பிறந்தவர்களுடன் வாக்குவாதம் செய்யாதீர்கள்?**

**திருப்பதி பக்தர்ளுக்கு ஷாக் நியூஸ்..!**

**புதன் தோறும் கொட்டிக்கிடக்கும் வேலை வாய்ப்புகள்!**

**அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!**

## ஹார்முஸ் ஜலசந்தி பாதுகாப்பு குறித்து ட்ரம்ப் - மோடி 40 நிமிடங்கள் ஆலோசனை!



புதுடெல்லி, ஏப். 15–

மேற்கு ஆசிய பிராந்தியத்தில் பரபரப்பான சூழல் நிலவி வரும் நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் (ஏப்ரல் 14) பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசி வாயிலாக தொடர்பு (Trump Calls Modi) கொண்டு 40 நிமிடம் கலந்துரையாடினார். இதில் இரு நாட்டு உறவுகள் மட்டுமல்லாது, ஈரான் போர் குறித்தும் ஆலோசனை மேற்கொண்டனர்.

## சி.பி.எஸ்.இ. தேர்வு முடிவுகள்- டிஜிலாக்கர், அதிகாரப்பூர்வ இணையதளங்களில் மதிப்பெண்களை பார்க்கலாம்!

சென்னை, ஏப். 15–

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், 10–ஆம் வகுப்புத் தேர்வு முடிவுகளை விரைவில் வெளியிடவுள்ளது;

இந்த முடிவுகளை Umang மற்றும் DigiLocker செயலிகள் வாயிலாகவும் அணுகலாம்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதும், மாணவர்கள் cbse.gov.in, cbseresults.nic.in மற்றும் results. cbse.nic.in ஆகிய அதிகாரப்பூர்வ இணையதளங்களில் அவற்றைச் சரிபார்த்துக் கொள்ளலாம்.

## ஏப்.16 முதல் இ.வி.எம்-களில் சின்னம் பதிவேற்றம்!

சென்னை, ஏப். 15–

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர்கள், அவர்களின் சின்னங்களை பதிவேற்றும் பணி ஏப். 16 தொடங்க உள்ளதாக தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.


# சவால்

# அமெரிக்காவின் தடையை மீறி ஹார்முஸ் ஜலசந்தியை கடந்த சீன கப்பல்

## ஈரான் தூதரகம் கிண்டல்...!!

பெய்ஜிங், ஏப். 15–

அமெரிக்காவின் தடையை மீறி சீன எரிவாயு கப்பல் நேற்று ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து சென்றது. இது அமெரிக்காவுக்கு விடுக்கப்பட்ட சவாலாக கருதப்படுகிறது. ஈரானை ஒட்டி அமைந்துள்ள ஹார்முஸ் ஜலசந்தியின் இரு முனைகளிலும் சரக்கு, எண்ணெய் கப்பல் போக்குவரத்தை அமெரிக்க கடற்படை முடக்கி உள்ளது. இந்த சூழலில் அமெரிக்காவின் தடையை மீறி சீனாவின் ரிச்ஸ்டாரி என்ற எரிவாயு கப்பல் நேற்று ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தது. இதில் 2.5 லட்சம் பேரல் மெத்தனால் நிரப்பப்பட்டு இருந்தது. ஐக்கிய அரபு அமீரகத்தின் துறைமுகத்தில் இருந்து சீன கப்பல் புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.



இந்த சீன கப்பல் ஈரானில் இருந்து தொடர்ச்சியாக எரிவாயுவை நிரப்பிச் சென்றது. இதன்காரணமாக அண்மையில் ரிச் ஸ்டாரி கப்பலுக்கு அமெரிக்க அரசு தடை விதித்தது. ஆனால் அமெரிக்காவின் தடையை மீறி அந்த கப்பல் மேற்கு ஆசியாவில் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

ரிச் ஸ்டாரி நேற்று ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தபோது, கப்பலின் கேப்டன் அமெரிக்க கடற்படைக்கு முறைப்படி தகவல் தெரிவித்துள்ளார். அமெரிக்க அரசால் தடை விதிக்கப்பட்ட கப்பல் என்றபோதிலும் அந்த கப்பல் தடுத்து நிறுத்தப்படவில்லை. அமெரிக்காவுக்கு சவால் விடுக்கும் வகையில் ஹார்முஸ் ஜலசந்தியை சீன கப்பல் கடந்து சென்றிருப்பதாக சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக கானா நாட்டில் செயல்படும் ஈரான் தூதரகம் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: சீன கப்பல் ஹார்முஸ் ஜலசந்தியை வெற்றிகரமாக கடந்து சென்றுள்ளது. அமெரிக்காவின் மிகப்பெரிய போர்க்கப்பல்கள், சீன கப்பலுக்கு தொடர்ந்து எச்சரிக்கை விடுத்துள்ளன. ஆனால் சீன கப்பலின் கேப்டன் எதையும் கண்டுகொள்ளாமல் ஹார்முஸ் ஜலசந்தியை நிதானமாக கடந்து சென்றுள்ளார்.

அமெரிக்காவுக்கு அஞ்சும் நாடுகளுக்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டு இருப்பதாகவும் அஞ்சாத நாடுகளுக்கு தடை பொருந்தாது என்றும் சொல்லப்படுகிறது. அமெரிக்காவுக்கு அஞ்சாத நாடுகளின் பட்டியல் மிகவும் நீளமாக இருக்கிறது. இவ்வாறு ஈரான் தூதரகம் கிண்டலடித்துள்ளது. இந்நிலையில ஜக் விக்ரம் என்ற எல்பிஜி கப்பல், ஹார்முஸ் ஜலசந்தியை வெற்றிகரமாகக் கடந்து, நேற்று (15.04,2026) குஜராத் மாநிலம் காண்ட்லா துறைமுகத்திற்கு பாதுகாப்பாக வந்தடைந்தது. இந்தக் கப்பல் 20,400 மெட்ரிக் டன் திரவ பெட்ரோலிய வாயுவை (எல்பிஜி) ஏற்றி வந்துள்ளது....

## இஸ்ரேல் - லெபனான் பேச்சுவார்த்தை: ஈரானின் பினாமி குழுவை குறிவைக்கும் அமெரிக்கா!

அமெரிக்கா, ஏப். 15–

ஈரான் மீதான தாக்குதலை முடிவுக்கு கொண்டு வர சமீபத்தில் பாகிஸ்தானில், அமெரிக்கா மற்றும் ஈரான் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

ஆனால், இந்த பேச்சுவார்த்தையில் எந்த தீர்வும் எட்டப்படவில்லை. இந்நிலையில், ஹிஸ்புல்லா தீவிரவாத குழுவுடனான மோதலை முடிவுக்கு கொண்டுவரும் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட லெபனானும் இஸ்ரேலும் புதன்கிழமை ஒப்புக் கொண்டது. வாஷிங்டனில் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற சந்திப்பை தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஈரான் மீதான தாக்குதலில் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதை கண்டித்து மார்ச் 2–ஆம் தேதி இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா ஏவுகணை தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மேற்கு ஆசியாவின் பரந்த மோதலில் லெபனான் ஈடுபடுத்தப்பட்டது.





இஸ்ரேல் – லெபனான் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் செய்த அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, ஈரானின் பினாமி குழுவின் செல்வாக்கை முடிவுக்குக் கொண்டுவர இது ஒரு வரலாற்று வாய்ப்பு என்று கூறினார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ‘பாக்ஸ் நியூஸ்’ உடனான நேர்காணலில், ஈரானுடனான போர் முடிவுக்கு வரும் நிலையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

## தொகுதி மறுசீரமைப்பு: எதிர்க்கட்சி தலைவர்கள் ஆலோசனை...!



புதுடெல்லி, ஏப். 15–

நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் ஏப்ரல் 16 முதல் 18, 2026 வரை நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. மக்களவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை 543–லிருந்து 850–ஆக உயர்த்தப் பரிந்துரைக்கும், ‘அரசியலமைப்பு (131–வது திருத்தச்) சட்ட மசோதா, 2026’–ஐ விவாதிப்பதே இக்கூட்டத்தின் முதன்மை நோக்கமாகும். நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில்,தொகுதி மறுசீரமைப்பு உள்பட சில மசோதாக்களை தாக்கல் செய்ய மத்திய பாஜக அரசு முடிவு செய்துள்ள நிலையில், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே தலைமையில் எதிர்க்கட்சி தலைவர்கள் இன்று டெல்லியில் ஆலோசனை நடத்துகின்றனர்.

## தொகுதி வரையறை - திமுக போராட்டம்!



சென்னை, ஏப். 15–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு கூறியிருப்பதாவது:–

உயரட்டும் கருப்புக்கொடி!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இந்தியாவின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட குற்றத்துக்காக தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்குத் தண்டனையா?

மத்திய பா.ஜ.க. அரசு நாளை நாடாளுமன்றத்தில் கொண்டுவரவுள்ள தொகுதி மறுவரையறை சட்டத்திருத்தம் தமிழ்நாட்டுக்கும், தென்மாநிலங்களுக்கும் இழைக்கப்படும் “மாபெரும் வரலாற்று அநீதி”!


விந்திய மலைக்குத் தெற்கே உள்ள தென்னிந்தியர் ஒவ்வொருவரும் கொதித்துப் போயிருக்கிறோம். நெருப்போடு விளையாடுகிறது பா.ஜ.க.!

தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் நாளை நடக்கும்.

தமிழ்நாட்டின் குரலை மதித்து மத்திய அரசு பின்வாங்கவில்லை என்றால், அதற்கான விளைவுகளை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கும். இதற்காக, மிகப்பெரிய விலையை நீங்கள் கொடுக்க வேண்டி இருக்கும்!

தி.மு.க. தலைவராக, அனைத்துக்கும் மேல் சுயமரியாதையுள்ள தமிழனாக மீண்டும் எச்சரிக்கிறேன்! என்று கூறியுள்ளார்.

## தொகுதி மறுவரையறை: திமுக எம்.பிக்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!



சென்னை, ஏப். 15–

மத்திய பாஜக அரசு, நாளை (16.04.2026) நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை திருத்த மசோதா தாக்கல் செய்ய உள்ள நிலையில், அது தொடர்பாக திமுக எம்.பிக்களுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவசர ஆலோசனை மேற்கொள்கிறார்.

திமுக தலைவர் ஸ்டாலி இன்று (15.04.2026 ) மாலை 5 மணியளவில் தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் பெரியாம்பட்டியில் (பொதுக்கூட்டம்) பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இதன் காரணமாக காணொளி காட்சி மூலம் திமுக எம்.பி.க்களுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

## தர்மபுரியில் நடைபயிற்சியின் போது ஓட்டு சேகரித்த முதல்வர் ஸ்டாலின்!

தர்மபுரி, ஏப். 15–

தமிழக சட்டசபை தேர்தலுக்கான பிரசாரத்தில் அனைத்து கட்சியினரும் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில், முதல்வர் ஸ்டாலினும் ஒவ்வொரு மாவட்டத்திற்காக சென்று பிரசாரம் செய்து வருகிறார். தேர்தலுக்கு இன்னும் 8 நாட்கள் மட்டுமே இருக்கும் நிலையில் அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் பிரசாரத்தில் முழுவீச்சில் இறங்கி உள்ளனர்.



அந்த வகையில், தர்மபுரிக்கு சென்றுள்ள முதல்வர் ஸ்டாலின், இன்று காலை நடைபயிற்சியின் போது மக்களிடம் ஓட்டு சேகரித்தார். திமுக வேட்பாளர் செந்தில்குமாருக்கு ஆதரவாக கோட்ட தெரு பகுதியில் வீதி வீதியாக சென்று மக்களை சந்தித்து அரசின் திட்டங்களை எடுத்துரைத்து பிரசாரம் மேற்கொண்டார். அப்போது, சிலர் அவருடன் கைகுலுக்கி செல்பி எடுத்துக் கொண்டனர்.

## பீஹாரில் முதல் முறையாக முதல்வர் பதவியை கைப்பற்றியது பா.ஜ.!

பாட்னா, ஏப். 15–

பீஹார் முதல்வராக பா.ஜ.,வைச் சேர்ந்த சாம்ராட் சவுத்ரி, 57, இன்று பதவியேற்றார். இதன் மூலம் பீஹாரின் முதல்வர் பதவியை பாஜ முறையாக கைப்பற்றியது.

பீஹார் முதல்வராக ஐக்கிய ஜனதா தள தலைவர் நிதிஷ் குமார் இருந்த நிலையில், ராஜ்யசபா எம்.பி.,யாக சமீபத்தில் பொறுப்பேற்றார். இதையடுத்து மாநில கவர்னர் சையத் அட்டா ஹஸ்னைனை சந்தித்து முதல்வர் பதவியை நிதிஷ் குமார் ராஜினாமா செய்தார். இதனால் பா.ஜ. ,வைச் சேர்ந்தவரும் துணை முதல்வருமான சாம்ராட் சவுத்ரி, சட்டசபை கட்சி தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதையடுத்து, பீஹாரின் புதிய முதல்வராக அவர் இன்று பதவியேற்றார். பா.ஜ.,வைச் சேர்ந்த ஒருவர் பீஹார் முதல்வராக பதவி ஏற்று உள்ளது இதுவே முதன்முறை. ஜனதா தளத்தின் தலைவர் விஜய் குமார் சவுத்ரி துணை முதல்வராகப் பதவியேற்றார்.



**யார் இந்த சாம்ராட் சவுத்ரி?**

நிதிஷ் குமார் ஆட்சியில், துணை முதல்வராக இருந்தவர் சாம்ராட் சவுத்ரி. குஷ்வாஹா சமூகத்தைச் சேர்ந்த இவர், முதலில் லாலு பிரசாத் யாதவின் ராஷ்டீரிய ஜனதா தளத்திலும், அதன்பின் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளத்திலும் இருந்துள்ளார். இறுதியாக, கடந்த 2017ல் பா.ஜ.,வில் இணைந்த அவர், 2023ல் அக்கட்சியின் மாநில தலைவராகவும் பொறுப்பேற்றார்.

‘இனி, பீஹாரின் நிர்வாகப் பணிகளை புதிய அரசு கவனித்து கொள்ளும். இந்த புதிய அரசிற்கு என் முழு ஒத்துழைப்பும் வழிகாட்டுதலும் இருக்கும்’ என நிதிஷ் குமார் உறுதி அளித்துள்ளார்.

தலையங்கம் மதுரை மணி

புதன்கிழமை 15.04.2026

விசுவாவசு தமிழ் வருடம்

சித்திரை மாதம் 02-ம் தேதி

## பாகிஸ்தான் இரட்டை வேடம்!



ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28ஆம் தேதி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டு ராணுவ நடவடிக்கை தொடங்கின. இந்த போர் கிட்டத்தட்ட ஆறு வார காலம் நீடித்தது. இந்த சூழலில் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கு இடையே மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியது. சீனா ,எகிப்து, ஓமன் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் முயற்சியால் ஈரானும் அமெரிக்காவும் அமைதி பேச்சு வார்த்தைக்கு ஒப்புக்கொண்டன. தற்காலிகமாக இரண்டு வார கால போர் நிறுத்தமும் அமலில் இருக்கிறது. சனிக்கிழமை அன்று பாகிஸ்தான் முன்னிலையில் நடத்தப்பட்ட இருதரப்பு அமைதி பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்து விட்டது. இந்த சூழலில் எந்நேரமும் ஈரானும் அமெரிக்காவும் மீண்டும் போரை தீவிர படுத்தலாம் என அச்சம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சூழலில் தான் ஈரான் போரில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போட்டிருப்பது தற்போது வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. தி டிராப் நியூஸ் சைட் என்ற இணையதள பக்கத்தில் வெளியாகி இருக்கக்கூடிய ஆவணங்களில் 2025 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையே மிக முக்கியமான ஒரு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின் படி சவுதி அரேபியாவின் பாதுகாப்புக்கு எந்த ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் பாகிஸ்தான் அவர்களுக்கு துணை நிற்கும் என தெரிவித்துள்ளது.

மேலும் சவுதி அரேபியா கோரிக்கை வைக்கும் பட்சத்தில் பாகிஸ்தான் ராணுவ உதவிகளை கூட வழங்கும் என அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. இது தவிர பாதுகாப்பு துறையில் அனைத்து விதமான ஒத்துழைப்பு தருவது என அந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்று இருக்கிறது. ஈரான் ஏற்கனவே சவுதி மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த சூழலில் சவுதி கோரினால் பாகிஸ்தான் தன்னுடைய படைகளை அனுப்பியே ஆக வேண்டும்.

இந்த நிலையில் இதுவரை பொதுவெளியில் வராத இந்த ஆவணங்கள் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது, ஈரானுடன் பாகிஸ்தான் நீண்ட தூர எல்லையை பகிர்கிறது. இதனால் ஈரானை கண்காணிப்பதற்கும் ஈரான் தொடர்பான ரகசிய ஆயுதங்கள் மற்றும் ஈரான் தலைவர்கள் தொடர்பான தகவல்களை உளவு பார்ப்பதற்கும் பாகிஸ்தான் நாட்டின் எல்லை மிகவும் உதவியாக இருக்கும். ஏற்கனவே அயத்துல்லா அலி கமேனியின் இருப்பிடம் தொடர்பான தகவல்களை தெரிந்து கொள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவத்திற்கு பாகிஸ்தான் தான் உதவியாக நிற்கிறது என்ற குற்றச்சாட்டு வெளிவந்தது.

அந்த வகையில் ஈரானுக்கு எதிராக இருக்கக்கூடிய இரண்டு நாடுகளோடும் பாகிஸ்தான் ஒப்பந்தம் செய்துள்ளது. அது தவிர இரண்டு நாடுகளும் பாகிஸ்தானுக்கு பெரிய நிதி உதவியும் செய்துள்ளன. எனவே பாகிஸ்தான் அவர்களுக்கு இணங்கியே ஆக வேண்டிய கட்டாயத்தில் நிற்கிறது. இதனால் தான் பாகிஸ்தான் மீது நம்பகத்தன்மை இல்லை என ஈரான் தொடர்ந்து கூறி வருவதாகவும் இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைக்கு முதலில் மறுப்பு தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்த சூழலில் இரண்டாவது கட்ட அமைதி பேச்சுவார்த்தை பாகிஸ்தானில் இல்லாமல் இந்த முறை ஜெனிவாவில் நடத்த திட்டமிடப்படுகிறதாம். இது ஒருபுறம் இருக்க தற்போது சவுதி அரேபியாவின் முக்கிய தளங்களில் பாகிஸ்தானின் போர் விமானங்கள் மற்றும் படைவீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளன. ஒரு புறம் ராணுவ உதவி என சவுதியோடு ரகசிய ஒப்பந்தம் செய்த பாகிஸ்தான் மறுபுறம் போர் நிறுத்த பேச்சுவார்த்தையை மத்தியஸ்தம் செய்ய முயற்சிப்பது முரண்பாடான ஒரு நிலைப்பாடாக இருக்கிறது.

## சிறையில் இருந்து பரோலில் வந்து தாயாரின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற சவுக்கு சங்கர்!





சென்னை, ஏப். 15–

தனது தாயாரின் இறுதிச் சடங்கில் பரோலில் வந்து சவுக்கு சங்கர் பங்கேற்றார். சவுக்கு சங்கர் தாயாரின் மறைவுக்கு பழனிசாமி உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர்.

செய்தியாளர் / போட்டோ கிராபர் தேவை

மதுரை / சென்னை ஐ மையமாக கொண்டு இயங்கிவரும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு விளம்பர பிரிவில் பணிபுரிய துடிப்பும் /ஆர்வமும் /அனுபவமும் நிறைந்த செய்தியாளர்கள் / புகைப்பட கலைஞர்கள் தேவை.

தொடர்பு – 7904806432

## ராமேஸ்வரத்தில் குவியும் மக்கள்... திதி கொடுக்கும் போது இந்த தவறை பண்ணாதீங்க!

ராமேஸ்வரம், ஏப். 15–



முன்னோர்களுக்கான தர்ப்பணம் செய்வது, பித்ரு காரியம் செய்வதற்கான புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றுதான் ராமேஸ்வரம். பொதுவாகவே ஆடி அமாவாசை, தை அமாவாசை மற்றும் புரட்டாசி மாதம் வரும் மகாளய அமாவாசை ஆகிய மூன்று மாதங்களில் தான் புண்ணிய நதிகள், கடற்கரை, முக்கூடல், ராமேஸ்வரம், காசி, கயா உள்ளிட்ட இடங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி முன்னோர்களுக்கான காரியம், தர்ப்பணம் செய்வார்கள் அல்லது திதி கொடுப்பார்கள்.

சித்திரை மாதத்தில் வரும் அமாவாசை சூரியன் உச்சமாக இருக்கும் நாளில் வரும் என்பதால் இந்த நாளில் முன்னோர்களுக்கான காரியத்தை முறைப்படி செய்து முடிப்பது ஜாதகத்தில் உள்ள பித்ரு தோஷம், குடும்பத்தில் பல தலைமுறைகளாக இருக்கும் பித்ரு கடனை தீர்த்து, எதிர்மறையான தாக்கத்தை குறைக்கும் என்பது ஐதீகம். இதனால் தான் ராமேஸ்வரத்தில் சித்திரை மாத அமாவாசைக்கு, ஒவ்வொரு ஆண்டுமே அக்னி தீர்த்தத்தில் நீராடி, திதி கொடுப்பதற்கும் காரியம் செய்வதற்கும் பொதுமக்கள் திரள்வார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமில்லாமல் இந்த நாளில் கோ தானம் என்று சொல்லப்படும் பசு தானம் செய்வது, ஆடைகளை தானம் செய்வது ஆகிய பரிகாரங்களும் செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்திரை மாத அமாவாசைக்கு நீங்கள் ராமேஸ்வரத்திற்கு சென்று திதி கொடுப்பதாக இருந்தால் இந்த ஐந்து விஷயங்களை மறக்காதீர்கள்.

முதலாவதாக, அக்னி தீர்த்தம் என்று சொல்லப்படும் ராமேஸ்வரம் கடற்கரையில் நீராடி முன்னோர்களுக்கான திதி காரியம் அல்லது, தர்ப்பணம் ஆகியவற்றை செய்து முடிக்க வேண்டும்.

இந்த பித்ரு காரியத்தை செய்து முடிக்காமல் கோவிலுக்கு செல்லக்கூடாது அல்லது கோவிலுக்கு சென்று வந்த பிறகு தர்ப்பணம் செய்யக்கூடாது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் மீண்டும் அக்னி தீர்த்தத்தில் நீராடி ராமேஸ்வரம் கோவிலில் உள்ள 22 தீர்த்தங்களில் நீராடிய பிறகு ஆடைகளை மாற்றிக்கொண்டு சுவாமி தரிசனம் செய்யலாம்.

ராமேஸ்வரத்திற்கு சித்திரை மாத அமாவாசை அன்று தர்ப்பணம் செய்பவர்கள் அதை முடித்து நீராடி இறைவனை தரிசித்த பிறகு நேரடியாக வீட்டுக்கு திரும்ப வேண்டும்.

அமாவாசை திதி முதல் நாள் இரவே துவங்கி விடுவதால் காலை பிரம்ம முகூர்த்தத்தில் சூரிய உதயம் ஆகும் முன்பே சித்தர்களுக்கான தர்ப்பணம் செய்வது உகந்தது. அதற்குப் பிறகு கூட்டம் அதிகரிக்கும் என்பது குறிபிடத்தக்கது.

சித்திரை மாத அமாவாசை 2026 தொடக்கம் /முடியும் நேரம்:

சித்திரை அமாவாசை 2026, ஏப்ரல் 17 வெள்ளிக்கிழமை அன்று வருகிறது.

சித்திரை அமாவாசை 2026 திதி தொடக்க நேரம்: ஏப்ரல் 16, 2026 – 7:31 pm

சித்திரை அமாவாசை 2026 திதி முடியும் நேரம்: ஏப்ரல் 17, 2026 – 5:47 pm

## திருப்பதி பக்தர்ளுக்கு ஷாக் நியூஸ்.. தேவஸ்தானம் அதிரடி!

திருப்பதி, ஏப். 15–





கோடை விடுமுறை தொடங்கியுள்ளதால் பக்தர்களின் கூட்டம் திருப்பதியில் அதிகமாக இருக்கும். இதனை கருத்தில் கொண்டு, திருப்பதி தேவஸ்தானம் முக்கியமான நடவடிக்கையை எடுத்துள்ளது. அதாவது, கோடை நாட்களில் விஐபி தரிசனங்களை ரத்து செய்ய முடிவு எடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. விஐபி தரிசனத்திற்கான தினமும் 3 மணி நேரம் ஒதுக்கப்படுகிறது.

இந்த நேரத்தில் வெறும் 3,000 பக்தர்கள் மட்டுமே தரிசனம் மேற்கொள்வதாக தேவஸ்தானம் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அந்த மூன்று நேரத்தை சாதாரண பக்தர்களுக்கு வழங்கினால் 15 ஆயிரம் பக்தர்கள் தரிசிக்கலாம் என கூறுகிறது. எனவே, மே, ஜூன், ஜூலை மாதத்தில் விஐபி தரிசனம் மற்றும் இலவச தரிசனம் ரத்து செய்ய தேவஸ்தானம் முடிவு எடுத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வைகுண்ட ஏகாதசிக்கு எப்படி பின்பற்றப்படுகிறதோ அப்படியே கோடை காலத்திலும் பக்தர்களை தரிசனத்திற்கு அனுமதிக்க தேவஸ்தானம் முடிவு எடுத்துள்ளது.

கோடை விடுமுறைக்கு முன்பே சராசரியாக 80 ஆயிரம் மேற்கொண்டு வரும் நிலையில், தற்போது கோடை விடுமுறை தொடங்கியுள்ளதால் பக்தர்களின் கூட்டம் இன்னும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூலை மாத தரிசன டிக்கெட் விவரம்

திருப்பதி தேவஸ்தானம் ஜூலை மாதத்திற்கான தரிசன தேதியை அறிவித்துள்ளது. அதன்படி, அர்ஜித சேவைக்கான லக்கி டிப் சுப்ரபாதம், தோமலை, அர்ச்சனை, அஷ்டதல பாத பத்மாராதன சேவை டிக்கெட்டுகள் ஏப்ரல் 18ஆம் தேதி காலை 10 மணி முதல் ஏப்ரல் 20ஆம் தேதி வரை பதிவு செய்யலாம். லக்கி டிப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பக்தர்களின் பெயர்கள் ஏப்ரல் 20ஆம் தேதி அறிவிக்கப்படும்.


ஏப்ரல் 22ஆம் தேதி மதியம் 12 மணிக்கு முன் பணம் செலுத்தி டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அர்ஜித சேவை டிக்கெட்டுகள் ஏப்ரல் 22ஆம் தேதி காலை 10 மணி முதல் முன்பதிவு செய்யலாம். ஜூலை மாதம் விர்ச்சுவல் சேவைகளான கல்யாணோத்ஸவம், ஊஞ்சல் சேவா, அர்ஜிதா பிரம்மோத்ஸவம், சேவா டிக்கெட்டுகள், தரிசன டிக்கெட்டுகள் ஏப்ரல் 21ஆம் தேதி மாலை 3 மணிக்கு வெளியிடப்படும்.

மேலும், ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட்டுகள் ஏப்ரல் 24ஆம் தேதி காலை 10 மணிக்கு வெளியிடப்படும். அன்றைய தினம் மாலை 3 மணிக்கு திருப்பதி மற்றும் திருமலையில் தங்குவதற்கான அறைகளை முன்பதிவு செய்து கொள்ளலாம். ஸ்ரீவாணி விஜபி டிக்கெட் ஏப்ரல் 23ஆம் காலை 11 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான டிக்கெட்டுகள் ஏப்ரல் 23ஆம் தேதி மாலை 3 மணிக்கு வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 23ஆம் தேதி காலை 10 அங்கப்பிரதட்சண டோக்கன்கள் முன்பதிவு செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பக்தர்கள் இந்த தேதியை நோட் செய்து கொண்டு, உங்களுக்கான டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

## பென்ஷன் தொகையில் 15% உயர்வு! 65 வயதை கடந்த ஓய்வூதியதாரர்களுக்கு ஜாக்பாட் செய்தி!

புதுடெல்லி, ஏப். 15–




மத்திய அரசு ஓய்வூதியதாரர்களின் நீண்ட கால கோரிக்கையான “65 வயதிலிருந்தே கூடுதல் ஓய்வூதியம்” என்பது தற்போது மீண்டும் பேசு பொருளாகியுள்ளது. நாடாளுமன்ற நிலைக்குழுவின் இந்தப் பரிந்துரை அமல்படுத்தப்பட்டால், லட்சக்கணக்கான முதியவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும். 80 வயதிற்குப் பிறகு வழங்கப்படும் கூடுதல் ஓய்வூதியப் பலன்களை, 65 வயதிலிருந்தே படிப்படியாக வழங்க வேண்டும் என நாடாளுமன்றக் குழு மீண்டும் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி வெளியாகியு ள்ளது. இது குறித்த விரிவான விவரங்கள் மற்றும் தற்போதைய நிலவரங்களை காணலாம்.

**ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் அவசியம்: தற்போதைய நடைமுறை என்ன?**

தற்போதைய விதிகளின்படி, ஒரு ஓய்வூதியதாரர் 80 வயதை எட்டும்போது தான் அவரது அடிப்படை ஓய்வூதியத்தில் 20% கூடுதல் தொகை வழங்கப்படுகிறது. 100 வயதை எட்டும்போது இது 100% ஆக உயர்கிறது. ஆனால் 80 வயது வரை காத்திருப்பது நடைமுறையில் சாத்தியமற்றது என்றும், அதற்கு முன்பே மருத்துவச்செலவுகள் அதிகரிப்பதாகவும் ஓய்வூதியதாரர்கள் தரப்பில் தொடர்ந்து புகார்கள் எழுந்து வருகின்றன.

**கூடுதல் ஓய்வூதியம்: நாடாளுமன்றக் குழுவின் முக்கியப் பரிந்துரைகள்**

ஓய்வூதியதாரர்களின் நிதிச் சுமையைக் குறைக்க, நாடாளுமன்ற நிலைக்குழு பின்வரும் விகிதத்தில் கூடுதல் ஓய்வூதியத்தை வழங்கப் பரிந்துரைத்துள்ளது.

வயது வரம்பு கூடுதல் ஓய்வூதிய உயர்வு (%)

65 வயது முதல் 5% கூடுதல் ஓய்வூதியம்

70 வயது முதல் 10% கூடுதல் ஓய்வூதியம்

75 வயது முதல் 15% கூடுதல் ஓய்வூதியம்

80 வயது முதல் 20% கூடுதல் ஓய்வூதியம் (தற்போது அமலில் உள்ளது)

**ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியம்: மாநில அரசுகள் முன்னுதாரணம்**

மத்திய அரசு இந்தத் திட்டத்தைத் தாமதப்படுத்தி வரும் வேளையில், சில மாநில அரசுகள் ஏற்கனவே இதில் முன்னோடியாகத் திகழ்கின்றன. இமாச்சல பிரதேசம் மாநில அரசு மூத்த ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்கனவே கூடுதல் பலன்களை வழங்கி வருகிறது. அதேபோல ராஜஸ்தான் மாநில அரசும் சமீபத்தில் இக்கொள்கையை அமல்படுத்தி ஓய்வூதியதாரர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த மாநிலங்களின் நடவடிக்கையைச் சுட்டிக்காட்டியுள்ள நாடாளுமன்றக் குழு, மத்திய அரசும் உடனடியாக இதனைச் செயல்படுத்த வேண்டும் என அழுத்தம் கொடுத்துள்ளது.

கூடுதல் ஓய்வூதியம் மூலம் ஓய்வூதியதாரர்களுக்கு என்ன பயன்?

**மருத்துவச் செலவுகள் சமாளிக்க**

60 வயதைக் கடந்தாலே ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்ட முதுமைக்கால உபாதைகளால் மருத்துவச் செலவுகள் இரண்டு மடங்காகின்றன.

**பணவீக்கம் விலை உயர்வை சமாளிக்க?**

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால், பழைய ஓய்வூதியத் தொகை அன்றாடத் தேவைகளுக்கே போதுமானதாக இருப்பதில்லை.

நிதி பாதுகாப்புக்காக

முதியோர் தங்களின் அந்திமக் காலத்தில் எவரையும் எதிர்பார்க்காமல் கௌரவமாக வாழ இந்த 5% முதல் 15% வரையிலான உயர்வு பெரும் உதவியாக இருக்கும்.

**மத்திய அரசு செவிசாய்க்குமா?**

கடந்த காலங்களில் பலமுறை இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டும், நிதிச் சுமையைக் காரணம் காட்டி மத்திய அரசு இதனைத் தள்ளிப்போட்டு வருகிறது. ஆனால் தற்போது நாடாளுமன்றக் குழுவின் அழுத்தம் மற்றும் மாநில அரசுகளின் அமலாக்கம் காரணமாக, 8–வது ஊதியக் குழு (8th Pay Commission) அமைக்கப்படும் சூழலில் இது குறித்து சாதகமான அறிவிப்பு வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசுக்கு இது கூடுதல் நிதிச் சுமையாகத் தெரிந்தாலும், லட்சக்கணக்கான முதியவர்களின் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் கடமையாகும்.




## இந்த தேதியில் பிறந்தவர்களுடன் வாக்குவாதம் செய்யாதீர்கள்?



பிறந்த தேதியின் அடிப்படையில் 1 – 9 வரை ரேடிக்ஸ் எண்கள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு எண்ணும், தங்களுக்கே உரிய தனித்துவமான குணாதிசயங்களை கொண்டிருக்கும் நிலையில், எந்த தேதியில் பிறந்தவர்கள் (எந்த ரேடிக்ஸ் எண் கொண்டவர்கள்) வலிமையான ஒரு எதிரியாக இருப்பார்? தனது எதிரிக்கு சவால் விடும் விஷயங்களை தைரியமாக செய்வார்? என்பது குறித்து இங்கு நாம் காணலாம்!

**ரேடிக்ஸ் எண் 1**

ஆண்டின் எந்த ஒரு மாதத்திலும் 1, 10, 19, 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் எண் 1 பெறுகின்றனர். சூரியனை ஆளும் கிரகமாக கொண்ட இவர்கள், சூரியனின் ஆற்றலுடன் தொடர்புடையவர்கள். ஆற்றல் மிக்கவர்கள், ஆதிக்கம் செலுத்தும் நபர்கள். சூழ்நிலைகளை தங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றும் ராஜதந்திரிகள், எதிரிகளை எப்படி கையாள்வது என்பது நன்கு அறிந்த சாமர்த்தியசாலிகள்.




சூரியனின் ஆற்றலை கொண்டிருக்கும் இவரக்ள், சுயமரியாதைக்கு முன்னுரிமை அளிப்பவர்கள். அந்த வகையில் தன் உணர்வுகளை புண்படுத்தும் நபர்களுக்கு வலிமையான ஒரு எதிரியாக மாறுகின்றனர். தங்கள் ராஜதந்திரங்கள் மூலம், எதிரிகளின் மன வலிமையை சிதைப்பார்கள்; ஆக்கப்பூர்வமான திட்டங்களை செயல்படுத்துவார்கள்.

ரேடிக்ஸ் எண் 1 கொண்டவர்களின் மனதை யாரேனும் தவறுதலாக காயப்படுத்தினால், அவர்கள் அதனை ஒரு பெரிய விஷயமாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அதேநேரம், தெரிந்தே காயப்படுத்தினால், அதனை சாதாரணமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தன் மனதை காயப்படுத்தும் அந்த ஒரு நபரின் முதன்மை எதிரியாக அவர்கள் மாறிவிடுவார்கள்.

தைரியத்திற்கு பெயர் பெற்ற இவர்கள், தங்கள் எதிரிகளை பழிதீர்க்க நினைக்கையில் காரியங்களை ரகசியமாக செய்வது இல்லை, வெளிப்படையாக மற்றவர் அறியும் வகையில் தைரியமாக களத்தில் இறங்கி செயல்படுவார்கள். எனவே, இவர்களிடம் சற்று எச்சரிக்கையாகவே இருங்கள்!

**ரேடிக்ஸ் எண் 8**

மாதத்தின் 8, 17, 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 8 வழங்கப்படுகிறது. ரேடிக்ஸ் எண் கொண்டவர்கள் சனி பகவானை ஆளும் அதிபதியாக கொண்டவர்கள். வேத ஜோதிடத்தில் சனி பகவான், தனி நபரின் வினைகளுக்கு ஏற்ப கர்ம பலனை அளிக்கும் கிரகம் ஆவார்.



சனி பகவானின் குணம், அவருடன் தொடர்பு கொண்ட ‘ரேடிக்ஸ் எண் 8’ கொண்டவர்களிடமும் காணப்படுகிறது. ரேடிக்ஸ் எண் 8 கொண்டவர்கள் அடிப்படையில் கடின உழைப்பாளிகள், தங்கள் லட்சியங்களை அடைய எவ்வளவு பெரிய சவாலையும் சந்திக்க தயாராக இருப்பவர்கள். தங்கள் இலக்கை அடைய நிதானமாக காத்திருப்பவர்கள்.

மறுபுறம், தங்கள் பொறுமையை பாதிக்கும் விஷயங்களை யாரும் செய்தால், அவர்களை கடுமையாக எதிர்க்கும் குணத்தையும் கொண்டுள்ளனர். தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்த ஒரு நபரை மறக்க மாட்டார்கள், வாழ்நாள் எதிரிகளாக அவர்களை ஏற்பார்கள். ரேடிக்ஸ் எண் 8 கொண்டவர்களின் ஆதரவை நீங்கள் ஒரு முறை இழந்துவிட்டால், மீண்டும் அவர்களின் ஆதரவை பெறுவது இயலாத ஒரு விஷயம் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**ரேடிக்ஸ் எண் 9**

ஆண்டின் எந்த ஒரு மாதத்திலும் 9, 18, 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு ரேடிக்ஸ் எண் 9 வழங்கப்படுகிறது. எண் 9 கொண்டவர்கள், செவ்வாய் கிரகத்தை ஆளும் அதிபதியாக கொண்டுள்ளனர். வேத ஜோதிடத்தில் சிவப்பு கிரகம் – ஆக்ரோஷமான ஒரு கிரகமாக எண் 9 பார்க்கப்படுகிறது. ஆற்றல் மிக்க செவ்வாய் கிரகத்தை ஆளும் அதிபதியாக கொண்ட இவர்களின் கோபத்தை கட்டுப்படுத்துவது இயலாத ஒரு விஷயம்.



அடிப்படையில் தன்மையாக நடந்துக்கொள்ளும் குணம் கொண்ட இவர்கள், தன்னை சீண்டும் நபர்களை எதிர்கொள்ள தயங்குவது இல்லை. யாருக்கும் அஞ்சுவது கிடையாது, தனது விருப்பம் போல் துணிச்சலாக செயல்படுவார்கள். முன் கோபம் கொண்டிருக்கும் இவர்கள், தங்கள் உணர்வுகளை சீண்டும் நபர்களை ஒருபோதும் விட்டு வைப்பது கிடையாது.

சுயமரியாதையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள், தன்னை சார்ந்து இருப்பவர்களின் மதிப்பு, மரியாதையையும் அவர்கள் விட்டுக்கொடுப்பது இல்லை. தன் உணர்வுகளை பாதிக்கும் நபர்களுக்கு தக்க பதிலடி கொடுக்க, எந்த ஒரு எல்லைக்கும் செல்ல தயாராக இருப்பார்கள். எனவே, இவர்களிடன் ஒருபோதும் வழக்குகளை உண்டாக்க வேண்டாம், தேவையற்ற பிரச்சனைகளை செய்ய வேண்டாம்.




## காலையில் டீ- க்கு பதிலா ஏலக்காய் தண்ணீர் குடிச்சு பாருங்க.. எக்கச்சக்க நன்மைகள் இருக்கு..!



ஏலக்காய் உணவுகளுக்குச் சுவையையும் நறுமணத்தையும் சேர்க்கிறது. அதன் மருத்துவ குணங்கள் உடல் நலத்திற்கு நல்லது. தினமும் ஏலக்காய் ஊறவைத்த நீரைக் குடிப்பதால் பல ஆரோக்கிய நன்மைகள் இருப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர். அவை என்னவென்று இங்கே பார்ப்போம்.


நிபுணர்களின் கூற்றுப்படி, ஏலக்காய் தண்ணீர் குடிப்பதால் பல ஆரோக்கிய நன்மைகள் உள்ளன. ஏலக்காயை வெந்நீரில் ஊறவைத்துக் குடிப்பதால் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஏலக்காய் தண்ணீர் செரிமான நொதிகளின் உற்பத்தியைத் தூண்டி, உணவை எளிதில் ஜீரணிக்க உதவுகிறது. இது அஜீரணம், வாயு, வயிறு உப்புசம் மற்றும் வயிற்று வலி போன்ற செரிமானப் பிரச்சனைகளைக் குறைக்கிறது. இந்தத் தண்ணீர் மலச்சிக்கலைத் தடுக்கவும் மிகவும் உதவியாக இருக்கிறது.

**வாய் ஆரோக்கியத்திற்காக:** ஏலக்காயின் நுண்ணுயிர்க்கொல்லிப் பண்புகள் வாயில் உள்ள பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராடி, வாய் துர்நாற்றத்தை நீக்குகின்றன. இது ஒரு இயற்கையான வாய்ப் புத்துணர்ச்சியூட்டியாகச் செயல்படுகிறது. தினமும் இரண்டு ஏலக்காய்களை மெல்லுவது உங்கள் வாயைப் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கும். மேலும், அவை சிறுநீர் வழியாக உடலில் உள்ள நச்சுகளை வெளியேற்றி, சிறுநீரகம் மற்றும் கல்லீரலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன.

**சரும ஆரோக்கியம்:** ஏலக்காய் தண்ணீர் குடிப்பதால் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது. அதில் உள்ள பொட்டாசியம் மற்றும் பிற கனிமங்கள் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தி, உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றன. ஏலக்காய், சளி, இருமல், ஆஸ்துமா மற்றும் பிற சுவாசப் பிரச்சனைகளில் இருந்து நிவாரணம் அளிக்க உதவுகிறது. அதிலுள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள், சரும செல்களைச் சேதப்படுத்தும் ஃப்ரீ ரேடிக்கல்களை எதிர்த்துப் போராடுகின்றன. அவை சருமத்தை ஆரோக்கியமாகவும் பளபளப்பாகவும் வைத்திருக்க உதவுகின்றன.

**மன அழுத்தம் குறைகிறது:** ஏலக்காய்க்கு அமைதிப்படுத்தும் பண்புகள் உள்ளன. ஏலக்காய் தண்ணீர் குடிப்பதால் மன அழுத்தம், பதட்டம் குறைந்து மனநிலை மேம்படுகிறது. ஏலக்காய் தண்ணீர் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது. மேலும், சில ஆய்வுகள் ஏலக்காய் தண்ணீர் இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவுகிறது என்றும் காட்டுகின்றன.

**ஏலக்காய் தண்ணீர் செய்வது எப்படி?** ஒன்று அல்லது இரண்டு ஏலக்காய்களை எடுத்து, தோலை உரித்து, அதன் விதைகளை ஒரு குவளை தண்ணீரில் ஊற வைக்கவும். காலையில் எழுந்தவுடன் இந்தத் தண்ணீரை அப்படியே குடிக்கலாம் அல்லது விதைகளை நீக்கிவிட்டும் குடிக்கலாம். நீங்கள் ஏலக்காய் பொடியைப் பயன்படுத்தினால், அதை வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிக்கலாம். உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் அல்லது கர்ப்பிணிப் பெண்கள் ஏலக்காய் தண்ணீர் குடிப்பதற்கு முன்பு மருத்துவரை அணுகுவது நல்லது.



## சினிமா துளிகள்..!

## ரஜினிகாந்தின் 173-வது பட இயக்குநர் மீண்டும் மாற்றம்?




ரஜினிகாந்தின் 173–வது படத்தில் இருந்து இயக்குநர் சிபி சக்ரவர்த்தி விலகியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

'கூலி' படத்தை அடுத்து நெல்சன் திலீப்குமார் இயக்கும் 'ஜெயிலர் –2' படத்தில் நடித்து வருகிறார் ரஜினிகாந்த். இதையடுத்து அவரது 173–வது திரைப்படத்தை சுந்தர்.சி இயக்குவதாகவும், நடிகர் கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் தயாரிப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால், கதையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக சுந்தர்.சி விலகினார். இதனால், சிவகார்த்திகேயன் நடித்த 'டான்' படத்தை இயக்கிய சிபி சக்ரவர்த்தி, ரஜினிகாந்தை இயக்க இருந்தார். இதற்கான அறிவிப்பும் வெளியானது. படத்துக்கான முதல்கட்ட பணிகள் நடைபெற்று வந்தபோதே படத்தின் அறிவிப்பு வீடியோவும் அதில் இடம்பெற்ற பின்னணி இசையும் பெரிய வரவேற்பைப் பெற்றது.

இதன் படப்பிடிப்பு இம்மாத இறுதியில் நடைபெற இருந்த நிலையில் இப்படத்தில் இருந்து சிபி சக்ரவர்த்தி மாற்றப்பட்டுள்ளதாகத் கூறப்படுகிறது. அவர் மாற்றப்பட்டதற்கான காரணம் தெரியவில்லை. அவருக்குப் பதிலாக இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து 'ரஜினி 173' படத்தை இயக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

ரஜினி படத்துக்காக அடுத்தடுத்து 2 இயக்குநர்கள் மாற்றப்பட்டதால் ரசிகர்கள் குழப்பத்தில் உள்ளனர். அசோக் செல்வன், விஜய் சேதுபதி நடித்து வெற்றிபெற்ற 'ஓ மை கடவுளே', பிரதீப் ரங்கநாதன் நடித்து ஹிட்டான 'டிராகன்' ஆகிய படங்களை இயக்கியுள்ளார் அஷ்வத் மாரிமுத்து.

## புதுவை அமைச்சரவையில் புதிதாக துணை முதல்-அமைச்சர் பதவி?




புதுச்சேரி, ஏப். 15–

புதுவை அமைச்சரவையில் முதல்–அமைச்சருடன் சேர்த்து 6 அமைச்சர்கள் மட்டுமே இடம்பெறுவர்.

2021 சட்டமன்ற தேர்தலில் என்ஆர்.காங்கிரஸ், பா.ஜ.க. கூட்டணி ஆட்சியை பிடித்தது. அப்போது துணை முதல்–அமைச்சர் பதவியை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. முதல்–அமைச்சர் ரங்கசாமிக்கு அடுத்தபடியாக நமச்சிவாயத்துக்கு துணை முதல்–அமைச்சர் பதவி வழங்க பா.ஜ.க. முயற்சிகளை எடுத்தது. ஆனால், முதல்–அமைச்சர் ரங்கசாமி, இதற்கு உடன்படவில்லை.

இதனால் நமச்சிவாயம் 2வது அமைச்சராக அமைச்சரவையில் இடம்பெற்றார். இந்த நிலையில் கடந்த 9ம்தேதி புதுவை சட்டசபை தேர்தல் ஒட்டுப்பதிவு நடந்து முடிந்துள்ளது. தற்போது மீண்டும் துணை முதல்–அமைச்சர் பதவியை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இதற்காக உள்துறை அமைச்சகத்துக்கு அனுமதி கேட்டு கவர்னர் மாளிகையிலிருந்து கோப்பு அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது புதுவை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே கடந்த முறை என்ஆர்.காங்கிரஸ், பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்ற பிறகு துணை முதல்–அமைச்சர் பதவியை உருவாக்க முயற்சிகள் நடந்தது. இந்த முறை தேர்தல் முடிந்தவுடனேயே துணை முதல்–அமைச்சர் பதவிக்கான வேலைகள் தொடங்கியுள்ளது.

இருப்பினும் அமைச்சர்களை நியமிப்பது முதல்–அமைச்சரின் விருப்பம். இதனால் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் முதல்–அமைச்சர் கையில்தான் துணை முதல்–அமைச்சர் நியமனம் இருக்கும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தை பொறுத்தவரை துணை முதல்–அமைச்சர் என்ற பதவியே கிடையாது. ஆனால் மாநிலங்கள் தங்கள் வசதிக்காக அமைச்சரவையில் துணை முதல்–அமைச்சர் என்ற பொறுப்பை வழங்குகின்றன. அவர்களும் சட்டப்படி அமைச்சர்களாகத்தான் கருதப்படுவர்.

## சர்ச்சுக்குள் கட்சி சின்னத்துடன் சென்ற இயக்குனர் சுந்தர்.சி மீது வழக்குப்பதிவு!



மதுரை, ஏப். 15–

கடந்த இரு நாட்களுக்கு முன், எல்லீஸ் நகர் பகுதி கிறிஸ்தவ ஆலயத்துக்குள், இரட்டை இலை சின்னத்துடன் சென்ற சுந்தர்.சி அங்குள்ளவர்களிடம் ஆதரவு கேட்டதுடன், பிரார்த்தனையிலும் ஈடுபட்டார். தேர்தல் நடத்தை விதிகளின்படி, வழிபாட்டு தலங்களுக்கு வெளியேதான் வேட்பாளர் கேட்க ஆதரவு வேண்டும்.

அதை இயக்குனர் சுந்தர்.சி மீறியதாக திமுக வழக்கறிஞர் சுமேஷ் புகார் அளித்தார். புகாரின் பேரில் சுந்தர்.சி மீது எஸ்.எஸ்.காலனி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## மீன்பிடி தடைகாலம் தொடங்கியது!



ராமேசுவரம், ஏப். 15–

தடைகால சீசன் தொடங்கி உள்ளதை தொடர்ந்து ராமேசுவரத்தில் விசைப்படகுகளில் இருந்து மீன்பிடி வலை, மடி பலகை, ஐஸ் பாக்ஸ், சமையல் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து மீன்பிடி சாதனங்களையும் படகுகளில் இருந்து மீனவர்கள் வீடுகளுக்கு எடுத்து சென்று விடுவார்கள். தடைகால சீசன் தொடங்கியுள்ள போதிலும் நாட்டுப்படகு மற்றும் பைபர் படகுகள் வழக்கம்போல் மீன்பிடிக்க செல்ல அனுமதி உண்டு. அதனால் நாட்டுப்படகு மற்றும் பைபர் படகுகளில் மீனவர்கள் பிடித்து வரக்கூடிய அனைத்து வகை மீன்களும் இன்னும் சில நாட்களில் அதிக அளவில் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விசைப்படகுகளுக்கான 61 நாட்கள் மீன்பிடி தடைகால சீசன் தொடங்கியுள்ளதால் அனைத்து வகை மீன்களும் விலை உயரும் என்பதால் மீன் பிரியர்கள் திகைத்து உள்ளனர்.

## தமிழ்ப் புத்தாண்டு சந்திப்பு!





நேற்று பிறந்துள்ள பராபவ ஆண்டு சித்திரை மாதம் முதல் நாள் மாலை நமது கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற முன்னோடிகள் அதன் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம் அவர்களைச் சந்தித்து சால்வை அணிவித்து, இனிப்பு மற்றும் பரிசுகளை வழங்கி அன்பைப் பகிர்ந்து கொண்ட இனிய தருணம்.

நமது ஒருங்கிணைப்பாளர் தியாக தீபம் அ. பாலு, பொருளாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி, செயற்குழு உறுப்பினர்கள் ரெ. கார்த்திகேயன், குடந்தை ரகுநாதன், கவிஞர் மீ. ராமசுப்பிரமணியன், பி. பன்னீர்செல்வம், மற்றும் அமிர்தா போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர் ஆர். சம்பத், மேனாள் இராணுவ வீரர் எம். சண்முகசுந்தரம் கைத்தறி ஆடை அணிவித்து மகிழ்ந்தனர். பிறந்துள்ள புதிய தமிழ்ப் புத்தாண்டான பராபவ ஆண்டில் உலகம் முழுவதும் அமைதி தவழவும் ஏற்றத்தாழ்வுகள் நீங்கவும் அனைவரது நலமும் வளமும் மேம்பட இந்நாளில் இறையருளை வேண்டுவோம்.

வாழிய தமிழுணர்வு வாழியவே வாழிய நட்புணர்வு வாழியவே.

## 23-ந்தேதி வாக்குப்பதிவு: சிறப்பு பேருந்துகளை இயக்குகிறது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்...!




சென்னை, ஏப். 15–

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தங்கி வசிக்கும் தனியார் ஊழியர்கள் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊருக்கு சென்று வாக்களிக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது. சென்னையில் இருந்து முக்கிய நகரங்களுக்கு இந்த சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. வருகிற 21 மற்றும் 22–ந்தேதி ஆகிய 2 நாட்கள் நீண்ட தூரம் செல்லக்கூடிய பயணிகள் வசதிக்காக சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. இதுகுறித்து அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் மோகன் ' வெளியிட்டுள்ள அறிக்கையில், பொதுமக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் 21, 22 மற்றும் 23–ந்தேதி மதியம் வரை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் இருந்து தென் மாவட்ட பகுதிகள் மற்றும் வட மாவட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு தேர்தல் சிறப்பு பஸ்கள் இயக்கப்படும். இதற்கான முன்பதிவு தொடங்கியுள்ளது. பொது மக்கள் ஆர்வமாக முன்பதிவு செய்து வருகிறார்கள்.



திண்டுக்கல் மாவட்டம்,வேடசந்தூர் ஆத்துமேடு பகுதியில் அமைந்துள்ள சட்ட மாமேதை டாக்டர் பி. ஆர்.அம்பேத்கர் சிலைக்கு 136 –வது பிறந்த நாளை முன்னிட்டு ஆதித்தமிழர் சமூக நீதிப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தலித். சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் திண்டுக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் செல்வராசன், பழ.குருநாதன், கிறிஸ்துவ மக்கள் களம் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் செபாஸ்டின் உள்ளிட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881




## வேலை வாய்ப்பு

### மெட்ராஸ் ஐஐடியில் உதவிப் பேராசிரியர்கள் வேலை!

பணி: உதவி பேராசிரியர். மொத்த இடங்கள்: 40. காலியிடங்கள் ஏற்பட்டுள்ள பாடப்பிரிவுகள் விவரம்: ஏரோஸ்பேஸ் இன்ஜினியரிங், அப்ளைடு மெக்கானிக்ஸ் மற்றும் பயோ மெடிக்கல் இன்ஜினியரிங், பயோ–டெக்னாலஜி, கெமிஸ்ட்டிரி, கெமிக்கல் இன்ஜினியரிங், சிவில் இன்ஜினியரிங், கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் இன்ஜினியரிங், டேட்டா சயின்ஸ் மற்றும் இன்ஜினியரிங், எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங், இன்ஜினியரிங் டிசைன், ஹியூமனைடிஸ் மற்றும் சோஷியல் சயின்சஸ், மேனேஜ்மென்ட் ஸ்டடீஸ், மெடிக்கல் சயின்சஸ் மற்றும் டெக்னாலஜி, மெக்கானிக்கல் இன்ஜினியரிங், மெட்டலர்ஜிக்கல் மற்றும் மெட்டீரியல்ஸ் இன்ஜினியரிங், ஓஷன் இன்ஜினியரிங், இயற்பியல், ஸ்கூல் ஆப் இன்டர்டிஸிப்பினினரி ஸ்டடீஸ்.

வயது: 36க்குள். எஸ்சி/எஸ்டி/ஒபிசி/மாற்றுத்திறனாளிகள் பிரிவினருக்கு அரசு விதிமுறைப்படி தளர்வு அளிக்கப்படும். வயது வரம்பு: 31.12.2026 தேதியின்படி கணக்கிடப்படும்.

சம்பளம்: ரூ.70,900– ரூ.1,01,500. காலியிடங்கள் ஏற்பட்டுள்ள பாடப்பிரிவுகள் அல்லது அதற்கு இணையான பாடப்பிரிவுகள் ஏதாவதொன்றில் முதல் வகுப்பில் இளநிலை மற்றும் முதுநிலை பட்டம் பெற்று பி.ஹெச்டி பட்டமும் பெற்றிருக்க வேண்டும். கல்வித்தகுதி தொடர்பான கூடுதல் விவரங்கள் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரரின் கல்வித்தகுதி, பணி அனுபவம், கற்பிக்கும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். இதுபற்றிய விவரம் இ.மெயில் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படும். www. facapp.iitm.ac.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைன் விண்ணப்பத்துடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களை ஸ்கேன் செய்து அனுப்ப வேண்டும். பின்னர் ஆன்லைன் விண்ணப்ப நகலை பதிவிறக்கம் செய்து கைவசம் வைத்துக் கொள்ளவும். மேலும் கூடுதல் விவரங்களுக்கு www.iitm.ac.in என்ற இணையத ளத்தை பார்க்கவும். ஆன்லைனில் விண்ணப்பிக்க கடைசி நாள்: 15.10.2026.

### கடற்படை கப்பல் பழுதுபார்க்கும் யார்ட் (KOC) மற்றும் கடற்படை விமான யார்ட் (Koc) 240 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: கடற்படைக் கப்பல் பழுதுபார்க்கும் தளம் (KOC) மற்றும் கடற்படை விமானத் தளம் (KOC)
வேலைவாய்ப்பு வகை: தொழிற்பயிற்சி
கால அளவு: ஒரு வருடம்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 240 தொழிற்பயிற்சி பணியிடங்கள்
பணியிட மாற்றம்: கொச்சி
தொடங்கும் தேதி: 28.03.2026
கடைசி தேதி: 17.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.apprentice–shipindia.gov.in/

### சென்னை சுங்க ஆணையர் (பொது) அலுவலகம் 10 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: சுங்க ஆணையர் (பொது) அலுவலகம்
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 10 டிரேட்ஸ்மேன், சீமேன், கிரீசர் பணியிடங்கள்
பணியிடத்தில்: சென்னை
தொடங்கும் தேதி: 04.04.2026
கடைசி தேதி: 30.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://chennaicustoms.gov.in/ https://chennaicustoms.gov.in/

### கனரக வாகனத் தொழிற்சாலை, ஆவடி –450 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: கனரக வாகனங்கள் தொழிற்சாலை, ஆவடி
வேலைவாய்ப்பு வகை: தொழிற்பயிற்சி
கால அளவு: ஒரு வருடம்
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 450 தொழிற்பயிற்சி பணியிடங்கள்
பணியிட மாற்றம்: ஆவடி
தொடங்கும் தேதி: 16.03.2026
கடைசி தேதி: 20.04.2026
விண்ணப்பிக்கும் முறை: இணையவழி
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://nats.education.gov.in/

### செயலக பாதுகாப்புப் படை 10 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: செயலகப் பாதுகாப்புப் படை
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
பதவிகளின் பெயர்: காவலர் (முடிதிருத்துநர் மற்றும் சலவையாளர்) பதவிகள்
பணியிடங்கள்: இந்தியா முழுவதும்
தொடங்கும் தேதி: 30.03.2026
கடைசி தேதி: 28.04.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://recruitment.itbpolice.nic.in/



# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## சோழவந்தான் தனி தொகுதி வேட்பாளர் மருத்துவர் பாலமுருகனுக்கு உற்சாக வரவேற்பு



சோழவந்தான், ஏப். 15–

சோழவந்தான் தனி தொகுதியில் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் மாண்புமிகு சின்னம்மா அவர்களின் ஆசி பெற்ற வெற்றி வேட்பாளர் மருத்துவர் பாலமுருகனுக்கு தொகுதி முழுவதும் பொதுமக்கள் பெண்கள் உற்சாக வரவேற்பு வழங்கி வருகின்றனர் சோழவந்தான் பேரூர் பகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட மருத்துவர் பாலமுருகன் பூமேட்டு தெரு, மேலரத வீதி தெற்கு ரத வீதி பள்ளிவாசல் தெரு, வேளார் தெரு நாடார் தெரு, சப்பாணி கோவில் தெரு கீழப்பச்சேரி மேலப்பச்சேரி ஆர் எம் எஸ் காலனி பத்மா கார்டன் ஆகிய பகுதிகளில் நேற்று மாலை முதல் பிரச்சாரம் மேற்கொண்டார் சோழவந்தான் பேரூராட்சிக்கு உட்பட்ட14.15 16 17 18 ஆகிய வார்டு பகுதிகளான கீழப்பச்சேரி மேல பச்சேரி பகுதிக்கு வருகை தந்த கழக வேட்பாளர் மருத்துவர் பாலமுருகனுக்கு 1000க்கும் மேற்பட்ட பெண்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து உற்சாக வரவேற்பு அளித்தனர் ஆலுயர மாலை அணிவித்தும் ஆரத்தி எடுத்தும் கும்ப மரியாதை அளித்து குலவை போட்டும் மலர்கள் தூவியும் கழக வேட்பாளர் மருத்துவர் பாலமுருகனுக்கு வரவேற்பு அளித்தனர்.

## இடையகோட்டையில் அம்பேத்கர் 135 - வது ஆண்டு பிறந்தநாள் விழா!

ஒட்டன்சத்திரம், ஏப். 15–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இடையகோட்டை பேருந்து நிலையம் முன்பாக சட்ட மாமேதை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய 135–வது ஆண்டு பிறந்தநாள் விழா சிறப்பான முறையில் இனிப்பு வழங்கியும் புரட்சியாளர் அவர்களின் தியாகங்களையும் நினைவு கூர்ந்து அவரது பிறந்தநாளை இடையகோட்டை முகாம் மற்றும் வலையபட்டி முகாம் ஆகிய இரு முகாம்களும் ஒன்றிணைந்து புரட்சியாளர் அம்பேத்கர் அவருடைய பிறந்தநாளை விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் சிறப்பான முறையில் பிறந்தநாள் நிகழ்வு



கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு தலைமை இளைஞரணி மாவட்ட செயலாளர் சு.வடிவேல் தலைமை தாங்கினார். நிகழ்வை வலையபட்டி முகாமைச் சார்ந்த சக்திவேல் ஒருங்கிணைத்து கட்சியின் அனைத்து நிலை பொறுப்பாளர்களும் சிறப்பான முறையில் கலந்து கொண்டு அம்பேத்கர் அவர்களுடைய பிறந்தநாளில் அவருடைய திருவுருவப்படம் வைத்து மாலை அணிந்து இனிப்பு வழங்கியும் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வில் ரஞ்சித், பாலன், வீரமணி அஜய் , அழகர் திருமண நடராஜ் ரவி, சுப்பிரமணி ரவி, சதீஷ் போன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்கள்.

### தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கடந்த ஐந்து ஆண்டுகளில்

## இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டப்பணிகளின் விபரங்கள்

இராசிபுரம், ஏப். 15–



**சிறப்புதிட்டங்கள்**

ரூ.854.00 கோடி மதிப்பில் இராசிபுரம் நகராட்சி, 8 பேரூராட்சிகள் மற்றும் இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் ஒன்றியங்களில் உள்ள 523 கிராமப்புற குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டம். ரூ.424.00 கோடி மதிப்பில் மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலை இரு வழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மேம்படுத்துதல், இரு வழிதட உயர்மட்டப் பாலம் மற்றும் சங்ககிரிக்கு அணுகுப்பாலம். ரூ.350.00 கோடி மதிப்பில் மோகனூர்– நாமக்கல் – சேந்தமங்கலம் – இராசிபுரம் சாலை இரு வழிச்சாலையாக தரம் உயர்த்தப்பட்டு, 5 புதிய புறவழிச் சாலைகள். ரூ.53.00 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் அரசு தலைமை மருத்துவமனை. ரூ.8.25 கோடி மதிப்பில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இராசிபுரம் வட்டத்தில் 150 மாணவியர்கள் தங்கும் வகையில் ஒரு சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதி.

வன உரிமைச் சட்டத்தின் படி,25 பழங்குடியின மக்களுக்கு குறைந்த பட்சம் 0.06 சென்ட் முதல் அதிகபட்சமாக 3.51 ஏக்கர் வரை தனி நபர் உரிமைகளாக உரிமைச் சான்று. ரூ.35 கோடி மதிப்பீட்டில் 600 தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்வ கையில் மினி டைடல் பூங்கா. ரூ.34.12 கோடி மதிப்பீட்டில் நபார்டு திட்டத்தின் கீழ் புதுப்பட்டி முதல் கெடமலை வரை 9.90 கி.மீ. நீளத்திற்கு போதமலையில் சாலை. ரூ.1.12 கோடி மதிப்பீட்டில் பட்டணம் பேரூராட்சியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம். ரூ.4.03 கோடி மதிப்பீட்டில் புதிய தினசரி சந்தை மற்றும் வார சந்தை. ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் பூங்கா. ரூ.7.63 கோடி மதிப்பீட்டில் 8.55 கி.மீ. நீளத்திற்கு தார்சாலை பணி. ரூ.5.86 கோடி மதிப்பீட்டில் வணிகவளாக கடைகள். ரூ.10.58 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம். ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால். ரூ.2.20 கோடி மதிப்பில் இராசிபுரம் அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகம். ரூ.50.00 மதிப்பீட்டில் பட்டுவளர்ச்சித்துறையின் சார்பில் பலvமுனைபட்டு நூற்பகம் (ம) பட்டு முறுக்கேற்றும் மையகட்டிடம். ரூ.5.00 கோடி மதிப்பில் இராசிபுரம் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டிடம். ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம். ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கம். ரூ.73.00 இலட்சம் மதிப்பில் இராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் 5 கூடுதல் வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடம். ரூ.1.14 கோடி மதிப்பில் 6 கூடுதல் வகுப்பறை கொண்ட புதிய கட்டிடம். ரூ.5.54 கோடிமதிப்பில் 12 ஆய்வகங்கள் மற்றும் 2 கழிவறை தொகுப்புகள். ரூ.1.64 கோடிமதிப்பில் சிறப்பு பராமரிப்பு திட்டத்தின் கீழ் பல்வேறுபணிகள். ரூ.7.90 இலட்சம் மதிப்பில் காக்காவேரியில் வரட்டாறு ஆற்றில் கருப்பண்குட்டை அணைக்கட்டு. ரூ.25.00 இலட்சம் மதிப்பில் அணைப்பாளையம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கங்கத்தில் உரக்கிடங்கு. ரூ.20.00 இலட்சம் மதிப்பில் காக்காவேரி தொடக்கவே ளாண்மை கூட்டுறவு சங்கங்கத்தில் வேளாண் வணிகமையம். ரூ.20.00 இலட்சம் மதிப்பில் முள்ளுக்குறிச்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கத்தில் வேளாண் வணிக மையம். ரூ.12.70 இலட்சம் மதிப்பில் காக்காவேரியில் புதிய நியாயவிலைக் கடை கட்டிடம்.

ரூ.2.91 கோடி மதிப்பில் வெண்ண ந்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு புதிய கட்டிடம். ரூ.1.50 கோடி மதிப்பில் இராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க பருத்தி ஏல விற்பனை களம். ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் மின்னக்கல் ஊராட்சி, பிள்ளையார் கோவில் காடு பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டி. ரூ.30.00 இலட்சம் மதிப்பில் கல்லாங்குளம் மற்றும் ஓ.சௌதாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள். ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம்.





திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் ஐ பி செந்தில்குமார் அவர்களை ஆதரித்து அமைச்சர் ஒட்டன்சத்திரம் சக்கரபாணி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் இரா முத்தரசன் ஆகியோர் திண்டுக்கல் பாரதிபுரம், கலைஞர் நகர், சந்தை ரோடு பள்ளிவாசல், அண்ணாமலையார் ஸ்கூல் ரோடு, பொன் சீனிவாசா நகர், மேட்டுப்பட்டி ஆகிய பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டனர் திண்டுக்கல் பாரதிபுரம் பகுதியில் திமுக வேட்பாளர் ஐ பி செந்தில் குமார் பிரச்சாரத்தின் போது நெசவாளர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து நெசவு செய்து பிரச்சாரம் மேற்கொண்டார் உடன் திண்டுக்கல் மாநகராட்சி துணை மேயர் ராஜப்பா ம திமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன் முன்னாள் நகர் மன்ற தலைவர் நடராஜன் மற்றும் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.





C.S.I கிறிஸ்தவ நல அமைப்பு ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பில் பொதுசெயலாளர் வழக்கறிஞர் (தமிழக சிறுபான்மை மேம்பாட்டு கழகம்) பெர்னான்ட் ஸ் ரத்தின ராஜா அவர்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சு.முத்துசாமி, கிழக்கு சட்டமன்ற தொகுதி வேட்பாளர் (காங்கிரஸ்) கோபிநாத், மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் செந்தில்நாதன் ஆகியோருக்கு C. S. I கிறிஸ்தவ பெருமக்கள் ஆதரவு தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் கே இ. பிரகாஷ் எம்பி, ராஜேஷ் ராஜப்பா, வி சி க மேற்கு மண்டல துணைத் தலைவர் ஜாபர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





ஈரோடு மாவட்டத்தில் தொழில், வர்த்தகம் மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சியை முன்னேற்றும் நோக்கில் “சட்டமன்ற தேர்தல்” ஈரோடு மாவட்ட வேட்பாளர் அறிமுகக் கூட்டம் ஈரோட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை ஈரோடு மாவட்ட சிறு தொழில்கள் சங்கம் (EEDISSIA), CII, ஈரோடு சேம்பர் ஆஃப் காமர்ஸ் மற்றும் ஒளிரும் ஈரோடு ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தின. இந்த கூட்டத்தில், ஈரோடு மாவட்டத்தின் தொழில் மற்றும் வர்த்தக வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட முக்கிய கோரிக்கைகளை, சட்டமன்ற வேட்பாளர்களின் கவனத்திற்கு EEDISSIA சார்பில் முன்வைக்கப்பட்டது. தாங்கள் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தாங்கள் முன் வைத்த இக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று வலியுறுத்தினர்.





மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பல்லடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் க செல்வராஜ் அவர்கள் பல்லடம் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து திருச்சபை தலைவர்கள் மற்றும் போதகர்களை சந்தித்து வாக்கு சேகரிக்கும் கூடுகை பொங்கலூரில் மாவட்டத் துணை செயலாளர் சு.குமார்.தெற்கு மாநகர மாணவரணி அமைப்பாளர் செ. திலகராஜ். திருச்சபைகளின் பொறுப்பாளர் சே.அன்புராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் கூட்டணி கட்சி தோழர்கள் அனைத்து திருச்சபைகளின் ஊழியர்கள் போதகர்கள் கலந்து கொண்டு எங்களது அனைத்து வாக்குகளையும் இந்த முறை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிப்போம் என தெரிவித்தனர்.

## விஜய் வாக்குறுதி சாத்தியமா?

சென்னை, ஏப். 15–

‘நாங்கள் ஆட்சிக்கு வந்தால், விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும்’ என, த.வெ.க., தலைவர் விஜய் வாக்குறுதி அளித்துள்ளார். இதை நிறைவேற்றுவதற்கு சாத்தியமில்லை என, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது குறித்து, அவர்கள் கூறியதாவது: கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்கள், ‘நபார்டு’ எனப்படும் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் இருந்து, கடன் வாங்கியும், மக்களிடம் இருந்து திரட்டப்படும் டிபாசிட்டை வைத்தும், கடன் தருகின்றன.

அரசின் கடன் தள்ளுபடி அறிவிப்பால், ஏழைகள் பயனடைந்தால் பரவாயில்லை. ஆனால், வசதியானவர்களும் பயன் பெறுகின்றனர். இதனால், மக்கள் பணம் தான் விரயமாகிறது. தள்ளுபடி தொகையையும், அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு, உடனே வழங்காமல், ஐந்தாண்டுகளுக்கு தவணை முறையில்தான் வழங்குகின்றன. இதனால், சங்கங்கள் நிதி நெருக்கடியில் சிக்கிக் கொள்கின்றன.

எனவே, இதை தடுக்கும் வகையில், ‘கடன் தள்ளுபடி செய்யப்படும் தொகையை, தவணை முறையில், சங்கங்களுக்கு அரசு வழங்கக் கூடாது; தள்ளுபடி தொகை முழுதையும் ஒரே தவணையில், 45 – 60 நாட்களுக்குள் வழங்க வேண்டும்; இல்லையெனில், நிலுவைத் தொகை வாடிக்கையாளர் வங்கி கணக்கில் இருக்கும்’ என, 2024ல் ரிசர்வ் வங்கி உத்தரவு பிறப்பித்தது. ஏற்கனவே, தமிழகம் உட்பட பல மாநில அரசுகள், நிதி நெருக்கடியில் உள்ள நிலையில், எந்த அரசாலும் தள்ளுபடி தொகையை முழுதுமாக, அதுவும் இரு மாதங்களுக்குள் வழங்க முடியாது. இதன் காரணமாகவே, தற்போது ஆட்சியில் உள்ள தி.மு.க., தனது தேர்தல் அறிக்கையில், பயிர்க்கடன் தள்ளுபடி வாக்குறுதியை வழங்கவில்லை. இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

## கோவை வந்த சிதம்பரத்தை சந்திக்காமல் வேட்பாளர்கள் புறக்கணித்ததால் பரபரப்பு!

கோவை, ஏப். 15–

கோவை வந்த காங்கிரஸ் மூத்த தலைவர் சிதம்பரத்தை, காங் வேட்பாளர்கள் சந்திக்கவில்லை.

கோவை மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சிக்கு கவுண்டம்பாளையம், சிங்காநல்லூர் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. சிங்காநல்லூர் தொகுதியில் ஸ்ரீநிதி, கவுண்டம்பாளையம் தொகுதிக்கு சூரிய பிரகாஷ் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.



முன்னாள் மத்திய அமைச்சரும், காங். மூத்த தலைவருமான சிதம்பரம் நேற்று மதியம் கோவை விமான நிலையம் வந்தார். மாலை கோவை தெற்கு மற்றும் சூலூர் தொகுதிகளில் பிரசாரம் செய்தார். இரவு ஈரோட்டில் பிரசாரம் செய்தார். ஆனால் கோவையில் காங். போட்டியிடும் கவுண்டம்பாளையம், சிங்காநல்லூர் தொகுதிகளில் பிரசாரம் செய்யவில்லை.

தி.மு.க. சார்பில் விடுக்கப்பட்ட அழைப்பு என்பதாலும், கோவையில் தன்னுடைய ஆதரவாளர்களுக்கு சீட் வழங்கவில்லை என்பதாலும் அவர் பிரசாரம் செய்யவில்லை என்றனர் கட்சியினர். மறுபக்கம் கோவை வந்த சிதம்பரத்தை காங். வேட்பாளர்கள் இருவரும் கூட மரியாதை நிமித்தமாக சந்திக்காமல் புறக்கணித்தனர். இதனால் அக்கட்சியின் உள்கட்சி விரிசல் மேலும் அதிகரித்துள்ளது.

காங். நிர்வாகிகள் கூறுகையில், ‘கோவை வந்த சிதம்பரத்தை விமானநிலையத்திலும் வரவேற்கவில்லை. ஓட்டலில் மதியம் 3 முதல் 4.30 மணி வரை தங்கியிருந்தும் சந்திக்கவில்லை. 2 வேட்பாளர்களும் இளைஞர்கள். சிதம்பரம் மூத்த தலைவர். இந்த கூட்டணி உருவாக காரணமே அவர் தான். வேட்பாளர்கள் அவரை சென்று சந்தித்திருந்தால் பிரச்னை முடிந்திருக்கும். இது தவறான போக்கு.

சிதம்பரம் நாளையும்(இன்றும்) கோவையில் உள்ளார். அவர் இங்கிருந்து புறப்படுவதற்குள் வேட்பாளர் சந்தித்தால், வேட்பாளர்கள் மீது அதிருப்தியில் உள்ள சீனியர்கள் தேர்தல் பணி செய்ய வாய்ப்புள்ளது. இல்லையென்றால் பிரச்னை தொடரவே வாய்ப்புகள் அதிகம்’ என்றனர்.

## சென்னையில் 3 இடங்களில் விஜய் பிரசாரம்; போலீசார் அனுமதி!



சென்னை, ஏப். 15–

சென்னை தி.நகர், எழும்பூர், திருவல்லிக்கேணியில் இன்று (ஏப்ரல் 15) மதியம் 3 முதல் மாலை 6 மணி வரை தவெக தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொள்ள போலீசார் அனுமதி அளித்துள்ளனர்.

தற்போது சென்னையில் பல்வேறு இடங்களில் பிரசாரம் செய்ய அனுமதி கேட்டு தவெக தரப்பில் கடிதம் கொடுக்கப்பட்டது.

அதன்படி, சென்னை தி. நகர், எழும்பூர், திருவல்லிக்கேணியில் இன்று (ஏப்ரல் 15) மதியம் 3 முதல் மாலை 6 மணி வரை தவெக தலைவர் விஜய் பிரசாரம் மேற்கொள்ள போலீசார் அனுமதி அளித்துள்ளனர். அவருக்கு ரோடு ஷோவுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. பிரசாரத்திற்கு பல்வேறு நிபந்தனைகளை போலீசார் விதித்துள்ளனர். தவெகவினர் விஜயை வரவேற்க ஏற்பாடுகளை செய்துள்ளனர்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி–தேனி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அ.தி.மு.க. சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிமையத்தின் முன்பு, அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தேனி மாவட்டத்தில் என்.டி.ஏ.கூட்டணி சார்பில் போட்டியிடும் அ.தி.மு.க வேட்பாளர்கள் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் லோகிராஜன், கம்பம் தொகுதி வேட்பாளர் எஸ்.டி.கே.ஜக்கையன்,போடி தொகுதி அ.தி.மு.க.வேட்பாளர் வி.டி.நாராயணசாமி, மற்றும் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி அ.ம.மு.க.வேட்பாளர் டாக்டர் கதிர்காமு ஆகியோர்களை அறிமுகம் செய்து வைத்து பிரச்சாரம் செய்தார். அப்போது டி.டி.வி தினகரனும் பிரச்சாரம் மேற்கொண்டார்.அ.தி.மு.க.மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் நிர்வாகிகள், அ.ம.மு.க.மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் உள்பட என்.டி.ஏ.கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு , எடப்பாடி பழனிச்சாமி, டி.டி.வி.தினகரனுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020